# திக்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜுலை 19 ஆந் திகதி சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய திக்வெல்ல பிரதேச சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திக்வெல்ல பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 132,771,926 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவருகுஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,329,023 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருகுஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 26,845,706 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன.

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,498 | 1,615 | 1,515 |
| (ii) | குத்தகை வாடகை | 3,575 | 4,364 | 1,439 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 328 | 828 | 233 |
| (iv) | பிற வருவாய் | 5,900 | 7,783 | 4,477 |

#### 2.2.2 பொதுச் சந்தையில் உள்ள கடைகளது வரி

(அ) திக்வெல்ல பொதுச் சந்தையில் உள்ள 22 கடைகளின் வரி அறவீடு சம்பந்தாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முதலாம் இரண்டாம் இலக்கக் கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாததுடன் வாடகை அறவிடப்படவுமில்லை.

(ii) கடைகளது குத்தகை உடன்படிக்கை இலக்கம் 02 மற்றும் இலக்கம் 03 எனும் பிரிவுகளின்படி மாதாந்த குத்தகை வாடகை அறவிடப்படவில்லை. மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 07 கடைகளிலிருந்து ரூபா 424,370 கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) உடன்படிக்கைப் பிரகாரம் கடைகளது வியாபார உரிமை இன்னொருவருக்கு ஒப்படைக்கப்படலாகாது. எனினும், 04 ஆம் 07 ஆம் 10 ஆம் இலக்கக் கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(iv) ஒன்பதாம் இலக்கக் கடைக்கான கேள்விகள் கோரப்படவில்லை. 19 ஆம் 20 ஆம் 21 ஆம் 22 ஆம் இலக்கக் கடைகள் மூடப்பட்டிருந்தன.

(ஆ) திக்வெல்ல பஸ் தரிப்பிடத்தில் உள்ள 18 கடைகளது வரி அறவீடு சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குத்தகை உடன்படிக்கைப் பிரகாரம் 13 கடைகளிலிருந்து மீளாய்வாண்டு முடிவில் ரூபா 168,190 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) உடன்படிக்கைப் பிரகாரம் கடைகளது வியாபார உரிமை இன்னொருவருக்கு ஒப்படைக்கப்படலாகாது. எனினும், 03 ஆம் 5 ஆம் இலக்கக் கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(iii) வலஸ்கல ரத்மலே, திக்வெல்ல பெலிவத்த மற்றும் திக்வெல்ல பொதுச் சந்தையில் உள்ள மீன் கடைகளிலிருந்து உடன்படிக்கைப் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவில் ரூபா 473,621 அறவிடப்படாதிருந்தது.

(iv) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது 2010 டிசெம்பர் 27 ஆந் திகதிய தெஉ/உஆ/2010/01 இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் கடைகளைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 97,333 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 4,652,117 |

### 2.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) சபையின் அதினாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இலங்கை மின்சாரசபை அங்கீகரித்திருந்த வீதி விளக்குகளது எண்ணிக்கை 186 ஆகும். எனினும், 308

விளக்குகள் பொருத்தப்பட்டு மின் துணைப் பாகங்களுக்கு ரூபா 413,730 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபையானது இலங்கை மின்சார சபையிடமிருந்து மீளாய்வாண்டிற்கான பராமரிப்புச் செலவினமாகக் கோரிய தொகை ரூபா 135,144 ஆகும். எனினும், ரூபா 82,080 மாத்திரமே மீளளிப்புச் செய்யப்பட்டதால் மேலதிகமாக சபைக்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 53,064 ஆகும்.

(இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 218 க்கமைய, சபைக்குச் சொந்தமான காணிகளும் கட்டிடங்களும் வருடாந்தம் பொருட்கணிப்புக்குள்ளாக வேண்டுமெனினும், மீளாய்வாண்டில் அவ்வாறு நடைபெறவில்லை.

(ஈ) திறைசேரிச் செயலாளரின் 2002 ஜனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கைகள் இலக்கம் 14, இலக்கம் 28 என்பவற்றிற்கமைய, உள்ளூராட்சி நிறுவனங்களில் சமயாசமய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ள போதும், அவ்வேற்பாடுகளுக்கு முரணாக 35 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சபையின் நிதியிலிருந்து ரூபா 2,531,556 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. இச் சுற்றறிக்கைக் அறிவுறுத்துரைகளை மீறியவாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதால் நிறுவனத் தலைவர் அதற்கான தனிப்பட்ட பொறுப்பாளியாவார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(உ) பதினான்கு அங்கத்தவர்களைக் கொண்ட திக்வெல்ல பிரதேச சபை அங்கத்தவாகளுக்குச் சம்பளமாக மீளாய்வாண்டின்போது செலவழித்த தொகை ரூபா 643,500 ஆகும். 2011 ஆம் ஆண்டின் 10 சபைக் கூட்டங்களிலும் அதில் நான்குபேரே கலந்து கொண்டிருந்தனர். ஒருவர் 3 கூட்டத் தொடர்களில் மாத்திரமே பங்குபற்றியிருந்தார்.

(ஊ) மீளாய்வாண்டின் வரவு, செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவினத்தின் கீழ் சபை அங்கத்தவாகளது வேலை முன்மொழிதலும் சேர்த்துக்கொள்ளப்பட வில்லை. சமர்ப்பிக்கப்பட்ட 101 வேலை முன்மொழிதல்களில் 72 மாத்திரமே அமுலாகியிருந்தன. 8 அங்கத்தவர்கள் எதுவித முன்மொழிதல்களையும் சமர்ப்பிக்கவில்லை.

(எ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் எய்துவதற்கு ஒன்றிணைந்த திட்டம் ஒன்றும் அதற்கு அனுசரணையாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

(ஏ) வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு 2010 ஒக்டோபர் 15 ஆந் திகதியன்று தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட செயற்திறன் உடன்படிக்கையின் 3.08 பிரிவின் பிரகாரம், உப செயற்திட்ட ஆகுசெலவில் 5 சதவீத்திற்குக் குறையாத தொகை வைப்பிலிடப்பட்டு பிறிதாக ஒரு கணக்கு திறக்கப்படுதல், 4.02 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி மற்றும் மாகாண முன்னேற்ற திட்டமொன்றைத் தயாரித்தல், (குடுஜவு) 4.05 பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை, கணக்கீட்டு மற்றும் காலாண்டறிக்கைகள் தயாரிக்கபடுதல் என்பன நடைபெறவில்லை.

## 2.4 ஒப்பந்த நிர்வாகம்

வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 08 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 2010 ஜுலை 29 ஆந் திகதியன்று ரூபா 48,995,015 பெறுமதியுடைய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 27,532,453 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(i) அரங்கஹதெனிய சமன்மல்வத்த வீதி மற்றும் ரதம்பல உடகங்கொட ஆகிய வீதிகளில் உடன்படிக்கைக்குள்ளான விடய இலக்கம் 6.01 க்கமைய வீதியிலிடப்பட்ட 1:2:4 (19மிமீ) சீமெந்துக் கொங்ரீட் கலவையினது சக்தி (அழுத்தச் சக்தி) குறித்த நியமத்திற்கமையாது அதாவது ஒரு சதுர மில்லிமீட்டருக்கு 25 நிவ்டன் கிறேட் இற்குக் குறைவாக உள்ளமை, மொறட்டுவைப் பல்கலைக்கழக சிவில் பொறியியல் பிரிவினால் 2012 மார்ச் 21 ஆந் திகதிய பரீசீலனை அறிக்கை மூலம் உறுதிசெய்யப்பட்டிருந்தது.

(ii) குறித்த நியமத்திற்கமையாது 1.2.4 சீமெந்துக் கலவை இடப்பட்டமை தொடர்பாக அரங்கஹதெனிய சமன்மல்வத்தை வீதிக்கு 175 கன மீட்டருக்கு ரூபா 1,720,775 கொடுப்பனவு செய்யப்படவிருந்ததுடன் ரதம்பல உடகல்கொட வீதிக்கு 814 கன மீட்டருக்கு ரூபா 8,018,407 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(iii) 2012 ஏப்ரல் 02 அன்றும் வேலை முடிவுறாததுடன் உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின்படி அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமாகிய ரூபா 3,338,858 அறவிடப்படவுமில்லை.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.